உள்ளன. நான் ஏற்கெனவே சொன்னது போல இந்த இரண்டு சமஸ்தான திருக்கோவில்களிலும் பரம்பரை அறங்காவலர்கள் இருக்கிறார்கள். சட்டத் திருத்தம் கொண்டு வருவதன் மூல மாகத்தான் அங்கே அரசு அறங்காவலர்களை நியமிக்க முடியும். அதற்கான நடவடிக்கை விரைவிலே எடுக்கப்படும். இந்தக் கோவில்களுடைய வருமானத்தை எந்த வகையிலேயும் அரசுக்கு பயன்படுத்த முடியாது. ஆனால் கோவில்களுக்குப் பயன்படுத்த முடியும். அங்கே உள்ள வருமானத்தைக் கொண்டு கோவில் களிலே திருப்பணி செய்து, கோவில்களைச் சீரிய முறையில் நடத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

9-35 மணி

திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்டியல் உடைக்கின்றபோது, அரசு அலுவலாளர்கள் அங்கே வருகிறார்களா? இதுவரைக்கும் அப்படி வந்ததாக, அந்தப் பகுதியிலே பேச்சு இல்லை. இனி மேலாவது, அதை அரசு கண்காணிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, சிவகங்கை சமஸ்தானக் கோவில்களைப் பொறுத்த மட்டிலே, அங்கே ஒரு நீதிமன்ற 'ஸ்கீம்' இருக்கின்றது. அதன்படி, அந்தக் கோவில்களுக்கு மேனேஜர் என்ற முறையில் அறங்காவலராக ஒருவரை நியமிக்க முடியும். அதைப்போல இராமநாதபுரம் சமஸ்தானத்திற்கும். இவைஎல்லாம்அறநிலையத்துறையினுடைய கட்டுப்பாட்டிற்குள்ளேதான் இருக்கின்றன. உண்டியல் உடைப் பது பற்றியும் அங்கே உண்டியல் பணம் எல்லாம் ஒழுங்காகக் கணக்கு எழுதப்படுவது பற்றியும் இங்கே உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நானும் வருகின்ற 6-ஆம் தேதி அந்தப் பகுதியிலேயுள்ள சில கோவில்களைப் பார்க்க இருக்கின்றேன். பார்த்த பிறகு, நிச்சயமாக என்னென்ன தவறான முறைகள் அங்கு இருக்கின்றனவோ அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பயிர்க் கடன்

*3891 டாக்டர் க.காஞ்சனா

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தருமபுரி மாவட்டத்தில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் அளிக்கப்படும் பயிர்க் கடனில் அதிக அளவு உரமும், குறைந்த அளவு பணமும் தரப்படுவதை அரசு அறியுமா?

1990 மார்ச் 22]

(ஆ) ஆம் எனில், உர அளவைக் குறைத்து, பண அளவை அதிகபபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) தருமபுரி மாவட்டத்தில், கூட்டுறவு வங்கிகள் மூலம் அளிக்கப்படும் பயிர்க் கடன்களில், சில பயிர்களுக்குத் தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில்? அதிக அளவு உரமாகவும் குறைந்த அளவு ரொக்கமாகவும் தரப்படுவதை இந்த அரசு அறியும்.

(ஆ) இல்லை.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்பட்ட புகழ்பெற்ற உரக் கம்பெனி களான 'ஸ்பிக்', 'விஜய்', 'பாக்டம்பாஸ்' போன்ற உரக் கம்பெனிகள், ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று நிர்ணயித் திருக்கின்ற உர அளவைவிட, எங்கள் மாவட்டத்தில் கொடுக்கப் படுகின்ற அளவு அதிகமாக இருக்கின்றது. மனித உடம்பு, வேண்டுமானால், அதிகப்படியான வைட்டமின்களை உள்ளே அனுப்புகின்றபோது , சிறுநீரகங்களின் உதவியினால், சிறுநீரை வெளியேற்றும்போது சேர்த்து அனுப்புவதற்கு வாய்ப்பு இருக் கிறது. ஆனால் நிலத்திற்கு அப்படி ஒரு வாய்ப்பு இல்லை. இதனைக் கருத்திலே கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உர அளவினைக் குறைப்பதற்கு முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஏக்கராவிற்கும் எவ்வளவு உரம் தேவை, எவ்வளவு பூச்சிக் கொல்லி மருந்து தேவை, எவ்வளவு விதை தேவை என்பதை நிர்ணயிப்பதற்கு மாவட்ட அளவில், வேளாண்துறை அதிகாரிகள், எண்ணெய் வித்து அதிகாரிகள், தோட்டக்கலை அதிகாரிகள் ஆகியோர் உள்ளடக்கிய ஒரு அதிகாரிகள் குழு, மாவட்ட அளவிலேயும், மாநில அளவிலேயும் செயல்படுகிறது. மாவட்ட அளவிலே பரிந்துரை செய்யப்பட்ட அந்த அளவு, மீண்டும் மாநில அளவில் அதை மறுபரிசீலனை செய்யப்பட்டு ஆராய்ந்து அனுப்பப்படு கிறது. அந்த வரையறைகளின் அடிப்படையிலேதான் உரம், பூச்சி கொல்லி மருந்து, விதை ஆகியவை விகிதாச்சார அடிப்படையி யிலே பிரிக்கப்பட்டு, இவை ரொக்கமாகவும், பொருட்களாகவும் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''உழுபவன் கணக்கைப் பார்த்தால் உழக்கு அரிசி கூட மிஞ்சாது'' என்று சொல்வார்கள். கூட்டுறவு வங்கிகளின்

மூலம் எங்கள் மாவட்டத்தில் அளிக்கப்படுகின்ற பயிர்க்கடன், ஒரு ஏக்கரா நிலத்தில் நெல் சாகுபடி செய்ய வேண்டுமானால், சுமார் ரூ. 2,000 வரையிலே கொடுக்கப்படுகிறது. அதில் ரூ. 1,200 அளவுக்கு யூரியா, டிஏபி, பொட்டாஷ் போன்ற உர வகைகள் வழங்கப்படுகின்றன. மொத்தத்தில் ரூ. 800 தான், விவசாயத்திற்கு ரொக்கமாக தரப்படுகிறது. நடவு என்றும், களை என்றும், அறுவடை என்றும் வருகின்றபோது, பணப் பற்றாக்குறையினால் விவசாயி, கடன் வாங்குகின்றான். இல்லையானால், அவன் கடனாக எடுத்து வருகின்ற உரத்தில், பாதியைக் குறைந்த விலைக்கு வெளி மார்க்கெட்டிலே விற்று, மீண்டும் நஷ்டத்திற்கு உள்ளாகின்றான். இந்த நிலை தவிர்க்கப்பட்டு—இவற்றையெல்லாம், கருத்திலே கொண்டு—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திலே உரத்தினுடைய அளவைக் குறைத்து, பணத்தினுடைய அளவை அதிகரித்துக் கொடுக்க மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

9–40 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஒரு அளவினைக் குறிப்பிட்டார்கள். அந்த அளவு சரியான அளவா என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டத்தில் நெல் பயிரிடுவதற்கு, ரொக்கமாக ரூ. 650 வழங்கப்படுகிறது. உரத்திற்கு ரூ. 560 வழங்கப்படுகிறது. பூச்சிக்கொல்லி மருந்திற்கு ரூ. 180 வழங்கப்படுகிறது. விதைக்கு ரூ. 110 வழங்கப்படுகிறது. ஆக, மூன்றும் சேர்த்து, ரூ. 850. மொத்தம் ரூ. 1,500 கடனாக வழங்கப்படுகிறது. இதிலே, உரம் அதிகம் வழங்கப்பட வேண்டும் ; ரொக்கம் அதிகம் வழங்கப்படவேண்டும் என்பதிலே, ஒன்றும் வேறுபாடு இல்லை. நிபுணர் குழு அறிக்கைத் தருகிறார்கள். எதை வைத்து, அறிக்கை தருகிறார்கள் என்றால், மண் வளம், அங்கேயுள்ள நீர்ப் பாசனத்தினுடைய அளவு முறைகள், தட்பவெப்ப சூழ்நிலை இவற்றையெல்லாம் வைத்து அந்த நிபுணர் குழு, இந்த நிலங்களுக்கு இவ்வளவு உரம் தேவை, இந்த பயிர்களுக்கு இவ்வளவு பூச்சிக்கொல்லி மருந்து தேவை, இந்த அளவு நிலத்திற்கு இவ்வளவு விதை தேவை என்பதை எல்லாம் சயின்டிபிக்காக, அறிவியல் ரீதியாக தீர்மானித்து அறிவிக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் உரம், பூச்சிக்கொல்லி மருந்து எல்லாம் வழங்கப்படுகிறது. இன்னும் தெளிவாகச் சொன்னால், தர்மபுரி மாவட்டத்தில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உரம், பூச்சிக்கொல்லி மருந்து, விதையை விட ரொக்கப்பணம் தான் சதவிகிதத்திலும் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.